தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜ் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கே கட்டடம் நல்ல முறையில் கட்டப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நானும், திறந்து வைத்திருக்கிறோம். மேலும், அங்கே கூடுதல் கட்டடங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே, அவருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற காலகட்டத்தில் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

கூட்டுறவு வங்கிக் கட்டடம்

***53367—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் புதுவயல் ஆகிய இடங்களிலிருக்கும் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் புதுவயல் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் புதுவயல் கிளைக்கு ரூபாய் 3.19 இலட்சம்

[2015 செப்டம்பர் 15

மதிப்புள்ள 7 சென்ட் அரசு புறம்போக்கு காலிமனை பெறப்பட்டு, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. காரைக்குடி கிளைக்கு சொந்தக் கட்டடம் கட்ட, வங்கிக்கு சொந்தமான அடிமனையோ, காரைக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு நத்தம் புறம்போக்கு இடமோ எதுவும் இல்லை. இருப்பினும், இவ்வங்கிக் கிளைக்கு சொந்தக் கட்டடம் கட்ட தகுந்த அடிமனை பெற தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சித் தலைவனை, கருணைத் தலைவனை கண்களாய்ப் பெற்ற எங்கள் தாய், கணக்கில்லா ஏழைகளுக்குக் கடவுளாய் வந்த தங்கத் தாய். அண்ணா கனவுகள் அனைத்தையும் பொன்னாய் செய்த பூமித் தாய். மக்கள் திலகம் புரட்சித் தலைவராய் எழுந்துவந்த எழுச்சித் தாய். எங்கள் தாய். வாளெடுத்தால் வையகம் நடுங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தாள் எடுத்தால் மக்கள் மனம் குளிரும். போர் தொடுத்தால் எதிரிகள் படை அதிரும். புரட்சித்தலைவியாய் எழுந்தால் பொய்க் கூட்டம் பதறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் அமைந்துள்ள புதுவயலிலே கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கியும், காரைக்குடியிலே இடம் தேர்வு செய்து புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்றும் அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.